www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மதுரை மாவட்டம்

FMM

# முதல் இடைப் பருவத் தேர்வு - 2024

II - ஆம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள் : 45

காலம் : 1.30 மணி

### பகுதி - I

10 X 1 = 10

I சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
   இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2. நிதித் தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) கடனீந்தோர் ஆ) பணியாளர் இ) வாடிக்கையாளர் ஈ) அரசு

3. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

4. இந்தியாவில், கணக்கியல் தர நிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மைய வங்கி ஆ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   இ) உச்சநீதி மன்றம் ஈ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்

5. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ. 1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ. 60,00 எனில், அந்நிறுவனத்தின் முதல் ........... .
   அ) ரூ. 1, 60,000 ஆ) ரூ. 60,000 இ) ரூ. 1,00,000 ஈ) ரூ. 40,000

6. சொத்து கணக்கு கையாள்வது
   அ) தனிப்பட்ட நபர்கள்
   ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
   இ) சொத்துகள்
   ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்

7. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
   அ) நிதி நிலைமையை அறிய ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
   இ) நிதிநிலைமை மற்றும் இலாப-நட்டத்தை அறிய
   ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. ஒரு பேரேட்டுக் கணக்கின் பற்று பத்தியின் மொத்தத்திலிருந்தும் மற்றும் வரவுப் பத்தியின் மொத்தத்திலிருந்தும் நிகர இருப்பினை கண்டறியும் வழிமுறையை இவ்வாறு அழைக்கலாம்

அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்

இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக்கட்டுதல்

9. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்தக் கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?

அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்

இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

10. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) சொத்து | – | i) சம்பளம் வழங்கியது |
| 2) பொறுப்பு | – | ii) வாடகை பெற்றது |
| 3) வருவாய் | – | iii) கடனீந்தோர் |
| 4) செலவு | – | iv) நிலம் மற்றும் கட்டடம் |

அ) 1-iv, 2-i, 3-ii,4-iii ஆ) 1-iv, 2-iii, 3-ii,4-i

இ) 1-iii, 2-iv, 3-i,4-ii ஈ) 1-ii, 2-iii, 3-iv,4-i

## பகுதி – II

**II எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 2 = 10

**வினா எண். 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

11. கணக்கியல் செயல்பாட்டிலுள்ள படிநிலைகள் யாவை?

12. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

13. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| சொத்துகள் | = | ? | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| அ) 5,00,000 | = | 90,000 | + | ? |
| ஆ) 6,00,000 | = | ? | + | 40,000 |
| இ) ? | = | 4,60,000 | + | 80,000 |
| ஈ) 8,00,000 | = | ? | + | 50,000 |

14. பின்வருவனவற்றிற்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.

அ) சொத்துக்கள் குறைதல் மற்றும் பொறுப்புகள் குறைதல்.

ஆ) ஒரு சொத்து அதிகரித்தல் மற்றும் மற்றொரு சொத்து குறைதல்.

15. இருப்பாய்வு தயாரிக்கும் முறைகள் யாவை?

16. எடுத்தெழுதுதல் என்றால் என்ன?

17. பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேடுகளில் பதிவு செய்க.

1. சொந்த பயனுக்காக ரொக்கம் எடுத்தது ரூ. 8,000

2. தமது சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துக்கொண்ட சரக்கின் மதிப்பு ரூ. 10,000



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி - III

5 X 3 = 15

III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
வினா எண். 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

18. கணக்கியலின் பிரிவுகளை சுருக்கமாக கூறுக.

19. பின்வருவனவற்றை ஆள்சார் கணக்கு, சொத்து கணக்கு மற்றும் பெயரளவு கணக்கு என்று வகைப்படுத்துக.
அ) முதல் ஆ) கட்டடம் இ) உள் ஏற்றிச் செல் செலவு ஈ) ரொக்கம் உ) தள்ளுபடிப் பெற்றது ஊ) வங்கி எ) கொள்முதல் ஏ) கொடுபடவேண்டிய கூலி

20. ஜெயசீலி என்னும் தனி வணிகர் ஒரு பலசரக்கு கடையினை நடத்தி வருகிறார். 2018, ஜனவரியில் அக்கடையின் நடவடிக்கைகள் பின்வருமாறு இருந்தன. அவைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| | | |
|---|---|---|
| ஜனவரி | 1. ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 80,000 |
| | 2. வங்கியில் செலுத்திய ரொக்கம் | 40,000 |
| | 3. ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 5,000 |
| | 4. லிப்டன் நிறுவனத்திடமிருந்து சரக்குகளை கடனுக்கு கொள்முதல் செய்தது | 10,000 |
| | 5. ஜாய் என்பவரிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது 11,000 | |
| | 6. சம்பளத்தை ரொக்கமாக வழங்கியது | 5,000 |

21. 2018, ஜனவரி-1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
**சொத்துக்கள் :** ரொக்கம் ரூ. 40,000, சரக்கிருப்பு ரூ. 50,000, ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ரூ. 20,000, இயந்திரம் ரூ. 40,000,
**பொறுப்புகள் :** விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ரூ. 10,000
தொடக்கப்பதிவினைத் தந்து வினோத்தின் முதல் கணக்கில் எடுத்து எழுதவும்.

22. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து 2018 ஜனவரி மாதத்திற்கான ரொக்கக் கணக்கைத் தயாரிக்கவும்.

ஜன. 1. ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 62,000
3. ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது ரூ. 12,000
10. ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ரூ. 10,000
12. கூலி ரொக்கமாகச் செலுத்தியது ரூ. 4,000
25. அறைகலன் ரொக்கத்திற்கு வாங்கியது ரூ. 6,000

23. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக.
1) வெளித்தூக்குக் கூலி 2) உள் தூக்குக் கூலி 3) விற்பனை 4) கொள்முதல் 5) வாராக்கடன் 6) வட்டிச் செலுத்தியது 7) வட்டிப்பெற்றது 8) தள்ளுபடிப்பெற்றது 9) முதல் 10) எடுப்புகள் 11) விற்பனைத் திருப்பம் 12) கொள்முதல் திருப்பம்

24. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி – IV

IV அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 X 5 = 10

25. அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க.

2018 மார்ச்

| | |
|---|---|
| 1. மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2. ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3. ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6. கமலேசிடமிருந்து சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 8. ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10. ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14. கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18. வாடகை செலுத்தியது | 500 |
| 25. ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28. சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

***(அல்லது)***

ஆ) ஆட்டோமொபைல் நிறுவனம் நடத்தும் இராணியின் ஏடுகளில் பின்வரும் விவரங்களை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்க.

1) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ரூ. 80,000
2) இரமேஷிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ. 10,000
3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ரூ. 6,000
4) கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் ரூ. 8,000
5) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ. 2,000
6) வாடகை ரொக்கமாக செலுத்தப்பட்டது ரூ. 500.

26. அ) பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிந்து பேரட்டில் எடுத்தெழுதவும்.

| | |
|---|---|
| 2017 ஆக.1 தர்மா ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 70,000 |
| 6. கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் | 10,000 |
| 10. வாடகை கொடுத்தது | 3,000 |
| 20. ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு | 5,000 |

***(அல்லது)***

ஆ) மோட்டார் வாகனப் பொருட்களை விற்பனை செய்யும் ராஜு என்பவரது ஏடுகளிலிருந்து 2017 மார்ச் 31-ஆம் நாளன்று எடுக்கப்பட்ட கணக்குகளின் பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| கைரொக்கம் | 5,500 | நேரடிச் செலவுகள் | 5,000 |
| பெற்ற தள்ளுபடி | 300 | வெளித் தூக்குகக் கூலி | 3,500 |
| கடனீந்தோர் | 15,000 | முதல் | 45,000 |
| கட்டடம் | 50,000 | கொள்முதல் | 49,700 |
| தொடக்கசரக்கிருப்பு | 6,000 | விற்பனை | 59,400 |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com